# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)**

**ஆணை எண்: 256/பேரூ/2022**
**நாள் : 18.01.2023**

திரு. A. முகமது எர்ஷாத்,
வேர்க்கிளம்பி, கன்னியாகுமரி மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
வேர்க்கிளம்பி தேர்வுநிலை பேரூராட்சி,
கன்னியாகுமரி மாவட்டம். – எதிர் மனுதாரர்

கன்னியாகுமரி மாவட்டம், வேர்க்கிளம்பி, கரியமங்களத்துவிளை, காசிம் மன்சில், 18/33, என்ற முகவரியைச் சேர்ந்த திரு. A. முகமது எர்ஷாத், என்பவரது 17.11.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 21.11.2022 அன்று பெறப்பட்டு, 256/பேரூ/2022 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

கன்னியாகுமரி மாவட்டம், வேர்க்கிளம்பி, கரியமங்களத்துவிளை, காசிம் மன்சில், 18/33, என்ற முகவரியைச் சேர்ந்த திரு. A. முகமது எர்ஷாத் தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:-

> I am writing to your esteemed self to bring to your notice the nuisance caused by stray dogs in our colony located in Verkilambi Junction, Kumarankudi Village, Thiruvattar Taluk. The number of stray dogs in our colony has risen alarmingly. The rise in their number has led to various other

problems such as competition for food and shelter. The gangs of dogs often get involved in fierce wars. These fierce dogs pose serious threats to the safety of residents, especially children playing in the streets and parks. A few children have already been bitten by these dogs. I on behalf of the residents appeal to you to look into. Kindly relieve us of these dogs by getting them rehabilitated to homes for stray animals. We shall be grateful.

மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர் நாகர்கோவில் முகாமில் நடைபெறும் விசாரணைக்கு 05.01.2023 அன்று ஆஜராகுமாறு, 21.12.2022 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

**05.01.2023 அன்று மனுதாரர் நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.**

"கன்னியாகுமரி மாவட்டம், குமரன் குடி கிராமம், வேர்க்கிளம்பி சந்திப்பில் உள்ள எங்கள் காலனியில் தெரு நாய்களின் எண்ணிக்கை அதிகளவில் உள்ளது. இதனால் அப்பகுதியில் குடியிருக்கும் மக்கள் மற்றும் குழந்தைகள் பயத்துடனே வாழ்ந்து வருகின்றனர். எங்கள் பகுதியில் வசித்து வரும் சில குழந்தைகள் இத்தெருநாய்களின் கடிக்கு ஆளாகியுள்ளனர். இது குறித்து பலமுறை பேரூராட்சியில் புகார் அளித்ததில், அங்கு திரிந்து வந்த ஒரு சில தெருநாய்களை மட்டுமே பிடித்துவிட்டு, மற்றவற்றை கண்டுக்கொள்ளாமல் பேரூராட்சியினர் விட்டுள்ளனர்.

எனவே, எங்கள் பகுதியில் சுற்றித் திரியும் அனைத்து தெருநாய்களையும் பேரூராட்சியால் பிடித்திடவும், பகுதிவாழ் பொது மக்கள் தெரு நாய்களின் அச்சுறுத்தலின்றி வாழவும், தேவையான நடவடிக்கை எடுக்கும்படி இம்முறைமன்ற நடுவத்தினை கேட்டுக் கொள்கிறேன்" என குறிப்பிட்டுள்ளார்.

**05.01.2023 அன்று வேர்க்கிளம்பி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் இம்முறை மன்றத்தின் நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.**

"மனுதாரர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்றத்திற்கு அளித்திருந்த புகாரையொட்டி, வேர்க்கிளம்பி பேரூராட்சியில் சுற்றித் திரிந்த தெருநாய்களில் பெரும்பாலான நாய்கள் அதாவது 31 நாய்கள் பிடிக்கப்பட்டுள்ளன. மேலும், தெருநாய்கள் பிடிக்கும் பணிகள் பேரூராட்சியால் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. மக்களை அச்சுறுத்தும் அனைத்து தெருநாய்களையும், இன்னும் ஒரு மாத காலத்தில் பிடிக்கப்படும் என்பதை இம்முறை மன்றத்தில தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**முறையீட்டு மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம், வேர்க்கிளம்பி பேரூராட்சி செயல் அலுவலரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.**

மனுதாரர் தனது புகார் மனுவில் கன்னியாகுமரி மாவட்டம், குமரன்குடி கிராமம், வேர்க்கிளம்பி சந்திப்பில் உள்ள காலனியில் தெரு நாய்கள் எண்ணிக்கை அதிகளவில் உள்ளன என்றும் அப்பகுதியில் குடியிருக்கும் மக்கள் (ம) குழந்தைகள் பயத்துடன் வாழ்ந்து வருவதாகவும், சில குழந்தைகள் இத்தெருநாய் கடிக்கு ஆளாகி உள்ளனர் எனவும், எனவே தங்கள் பகுதியில் சுற்றித் திரியும் அனைத்து தெரு நாய்களையும் பேரூராட்சியால் பிடித்திடவும் பகுதி வாழ் பொது மக்கள் தெரு நாய்களது அச்சுறுத்தலின்று வாழவும் தேவையான நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொண்டுள்ளார்.

வேர்க்கிளம்பி தேர்வு நிலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தில் மனுதாரரால் தனக்கு அளித்த புகாரையொட்டி, வேர்க்கிளம்பி பேரூராட்சியில் சுற்றித்திரிந்த தெருநாய்களில் பெரும்பாலான நாய்கள் அதாவது 31 நாய்கள் பிடிக்கப்பட்டுள்ளன என்றும் மேலும் அப்பகுதியில் சுற்றித் திரியும் தெருநாய்களை பிடிக்கும் பணிகள் பேரூராட்சியால் துரிதப்படுத்தப்பட்டுள்ளது என்றும் எனவே மக்களை அச்சுறுத்தும் அனைத்து தெருநாய்களையும் இன்னும் ஒரு மாத காலத்திற்குள் பிடிக்கப்படும் என தெரிவித்துள்ளார்.

**பரிசீலனைக்குப்பின் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது:–**

வேர்க்கிளம்பி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளவாறு அனைத்து தெரு நாய்களையும் உரிய வழிகாட்டு நெறிமுறை விதிகளின்படி Prevention of Cruelty to Animals (Capture of Animals) Rules, 1979) பிடித்திடவும் அவற்றின் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்தும்பொருட்டு Animal Birth Control (ABC) (Dog) Rules, 2001ன்படி இனப்பெருக்கக் கட்டுப்பாடு நடவடிக்கையை மேற்கொண்டும் anti-rabies தடுப்பூசிகளையும் அவைகளுக்குச் செலுத்தி அதன்பின்னர் அவற்றை விடுவிக்குமாறும் பொது மக்கட்க்கும் சிறுவர் சிறுமியர்களுக்கும் குழந்தைகளுக்கும் ஆபத்தின்றி நடமாடும் சகஜ சூழ்நிலையை ஏற்படுத்தவும் பேரூராட்சியின் செயல் அலுவலர் அறிவுறுத்தப்படுகிறார். மாவட்ட உதவி இயக்குநர் பேரூராட்சிகள் (கன்னியாகுமரி மாவட்டம்) இதனை கண்காணித்து உறுதிசெய்ய அறிவுறுத்தப்படுகிறார். இரண்டு மாதங்களில் வாரம் ஒருமுறையோ அல்லது இருவாரங்களுக்கு

ஒரு முறையோ சுற்றித்திரியும் நாய்களைப் பிடித்து அறிவுரைகளின்படி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும், Animal Birth Control (ABC) (Dog) Rules, 2001 பிரிவு 4–ன்படி தெருநாய்களின் இனப் பெருக்கத்தை கட்டுப்படுத்த அனைத்து பேரூராட்சிகளிலும் கண்காணிப்புக் குழு (Monitoring Committee) அமைத்திடவும், தெரு நாய்களை பிடிக்கும்போது அவற்றை துன்புறுத்தாவண்ணம் வழிகாட்டு நெறிமுறைகளின்படி பிடித்திடவும் உறுதி செய்திட அனைத்து பேரூராட்சிகளின் செயல் அலுவலருக்கும் அறிவுரைகள் வழங்குமாறு பேரூராட்சிகளின் இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

2023–ஆம் ஆண்டு, ஜனவரி 18–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. A. முகமது எர்ஷாத்,
எண்.18/33, காஸிம் மஞ்சில்,
கரியமங்களத்துவிளை,
வேர்க்கிளம்பி, கன்னியாகுமரி மாவட்டம்.
2) செயல் அலுவலர்,
வேர்க்கிளம்பி தேர்வுநிலை பேரூராட்சி,
கன்னியாகுமரி மாவட்டம்.
3) பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
நகர்நிர்வாக அலுவலகம்,
ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி. நகர், சென்னை–28.
4) பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
கன்னியாகுமரி மாவட்டம்.
5) இணை இயக்குநர்(பொது) மற்றும் ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
பேரூராட்சிகளின் அலுவலகம்,
நகர் நிர்வாக அலுவலகம் / ஆணையாளர்,
ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி. நகர்,
சென்னை–28 (பெயரிடப்பட்ட உறையில்)

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்.

இ.கோ/உதிரி

//ஆணைப்படி/ அனுப்பப்படுகிறது//

செயலாளருக்காக.